பக்கங்கள் 16+6

# மாலை முரசு

கனடா முரசு இணைப்பு

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2055 ஆடி 09 வியாழக்கிழமை 25.07.2024 அதிர்வு 360

## விஜயதாஸவும் பொன்சேகாவும் ஜனாதிபதித் தேர்தல் களத்தில்

### இருவரும் உத்தியோகபூர்வமாக அறிவிப்பு



2024 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் வேட்பாளராகக் களமிறங்குவதாக நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ 04



## தமிழருக்காகத் தென்னிலங்கையில் இருந்து குரல் கொடுத்த விக்கிரமபாகு காலமானார்!

இலங்கையின் சிரேஷ்ட இடதுசாரி தலைவர்களுள் ஒருவரான நவ சம சமாஜக் கட்சியின் தலைவர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்ன சுகவீனம் காரணமாக தனது 81 ஆவது வயதில் நேற்று இரவு காலமானார்.

நீண்ட காலமாக சுகவீனமுற்றிருந்த அவர், கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்த நிலையில் காலமானார் எனத் தெரிவிக்கப் படுகின்றது.

1943ஆம் ஆண்டு மார்ச் 8ஆம் திகதி லுணுகலையில் பிறந்த கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்ன, மத்துகமவில் தனது ஆரம்பக் கல்வியையும், பின்னர் உயர்கல்வியை 04

## ஜனாதிபதித் தேர்தலுக்கான திகதி வர்த்தமானியில் நாளை அறிவிப்பு

### தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவிப்பு




ஜனாதிபதித் தேர்தலுக்கான திகதி உள்ளிட்ட தகவல்களை அறிவித்து நாளை அதிவிசேட வர்த்தமானியை வெளியிடுவதற்குத் தேர்தல்கள் ஆணைக் குழு தீர்மானித்துள்ளது.

இன்று இடம்பெற்ற தேர்தல்கள் ஆணைக்குழுவின் கூட்டத்தின்போது இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இதன்படி தேர்தல் திகதி, வேட்புமனு ஏற்றுக்கொள்ளப்படவுள்ள காலப்பகுதி உள்ளிட்ட விடயங்களைக் குறிப்பிட்டு இந்த விசேட வர்த்தமானி நாளை வெளியிடப்படும் என்று தேர்தல்கள் ஆணைக் குழு அறிவித்துள்ளது.





## முன்னாள் போராளியான சுயாதீன ஊடகவியலாளர் யாழில் வாடகை வீட்டிலிருந்து இன்று சடலமாக மீட்பு!

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஆரியகுளம் பகுதியில் முன்னாள் போராளியான சுயாதீன ஊடகவியலாளர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

ஆரியகுளம் சந்திக்கு அருகாமையிலுள்ள வாடகை வீட்டில் தங்கியிருந்த நிலையிலேயே அவர் சடலமாக மீட்கப் பட்டுள்ளார்.

குறித்த வீட்டில் இருவர் தங்கியிருந்த நிலையில் ஒருவருக்குத் திடீரென ஏற்பட்ட நெஞ்சு வலி காரணமாக உயிரிழந்துள்ளார் என்று பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது. 04





# ஈழத் தமிழர்களுக்காக ஓங்கி ஒலித்த குரல் ஓய்ந்தது...!

## உண்மையை உரக்கக் கூறிய விக்கிரமபாகு கருணாரத்ன !!

● ஐங்கரன் விக்கினேஸ்வரா

(உண்மையை எப்போதும் உரக்கக் கூறிய நவ சமசமாஜ கட்சியின் தலைவர் கலாநிதி விக்ரமபாகு கருணாரட்ன தனது 81 ஆவது வயதில் காலமானார். கடந்த 2010 ஆம் ஆண்டில் கருணாரட்ன ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்டுருந்தார். விக்ரமபாகு கருணாரட்ன தமிழ் மக்களுக்கு ஆதரவான நிலைப்பாட்டைக் கொண்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.)

வந்தேறிகளான தமிழர்கள் வடக்குக்கு எப்படி உரிமை கோருவது என எல்லாவல மேத்தானந்த தேரோ 2012 ஆம் ஆண்டு கடும் இனவாதத்தோடு கேள்வி எழுப்பியிருந்தார். இதற்கு பதிலளித்த நவ சமசமாஜ கட்சியின் தலைவர் விக்கிரமபாகு கருணாரத்ன, தேரருக்கு சவால் விடுத்தார். அதாவது "இலங்கைத் தீவு தமிழர்களுக்கு உரிய தேசம் என்பதை உரிய ஆதாரங்களுடன் நிரூபித்துக் காட்டுவேன். முதுகெலும்பிருந்தால் தேரர் விவாதத்துக்கு வரத் தயாரா?" என வெளிப்படையாகவே அவர் சவால் விடுத்திருந்தார்.

ஈழ தமிழர்களுக்கு ஆதரவாக ஒலித்த குரல் இன்று மறைந்தது. சிங்கள பேரினவாத தலைமைகளுக்கு மத்தியில், ஒட்டுமொத்த தமிழினத்துக்கு எதிராக கட்டவிழ்த்துவிடப்பட்ட இன பிரச்சினைக் களுக்கும் அரசியல் ரீதியான பிரச்சினைகளுக்கும் தனித்து நின்று குரல் கொடுத்தவர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்ன.

சிங்கள இனத்தவராக இருந்தாலும் அவருடைய மறைவு தமிழ் மக்களுக்கு ஓர் பேரிழப்பாகவே அமையும். ஈழத் தமிழரின் விடுதலையையும், உரிமைகளையும் சிங்கள மக்கள் அறியும்படி செய்த பெரும் தலைவர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்ன.

தொல் பொருள் தொடர்பான ஜனாதிபதி செயலணியின் நோக்கம், தொல் பொருளகளை பாதுகாப்பதே தவிர முரண்பாடுகளை தோற்றுவிப்பது அல்ல எனவும், இது தொடர்பில் செயலணியின் உறுப்பினர்களின் செயற்பாடுகள் குறித்து ஜனாதிபதியிடம் தனிப்பட்ட முறையில் அவர் முறையிட்டிருந்தார்.

ஒரு பிரதேசத்தில் எந்த இனத்தவர்கள் அதிகம் வாழ்கின்றார்களோ அங்கு அந்த இனமே பெரும்பான்மையினமாக கருதப்படும். தெற்கில் சிங்களவர்கள் அதிகமாக வாழ்கின்றமையால் அம்மாகாணம் பெரும்பான்மை இனத்தவர்கள் உரிமைக் கொண்டாடுகிறார்கள். அதேபோல்தான் வடக்கு மற்றும் கிழக்கிலும்.

வடக்கில் தமிழ் மக்கள் வரலாற்று காலம் தொடக்கம் வாழ்ந்துள்ளமைக்கான ஆதாரங்கள் மத தலங்களின் ஊடாகவும், மத வழிப்பாடுகளுடனும் உறுதிப் படுத்தப்பட்டுள்ளன.இவ்வாறான தன்மையே கிழக்கிலும் காணப்படுகிறது.



இலங்கை பல்லின சமூகம் வாழும் நாடு அனைத்து இன மக்களின் உரிமை மற்றும் கலாசாரங்கள் பாதுகாக்கப்பட வேண்டும். தமிழ் மக்களின் பூர்வீகம் வடக்கு மற்றும் கிழக்கு என்பது அனைவரும் அறிந்த விடயமே என கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்ன தெரிவித்திருந்தார்.


நீண்டகாலமக சிங்கள பேரினவாத அரசாங்கத்தின் பல தவறான செயற்பாடுகளை பகிரங்கமாக சுட்டிக் காட்டியதுடன் அவற்றுக்கு எதிராகவும் போராடினார். அத்துடன் சிங்கள அரசு தமிழ் மக்களுக்கு இழைத்த அநீதிகளை உலகறிய செய்ததில் இவருக்கும் ஒரு பாரிய பங்குண்டு.

ஈழப்போர் மௌனிக்கப்பட்ட 2009 இன் பின்னர் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணம் தமிழர்களின் பூர்வீக பிரதேசம் அல்ல என தொல்பொருள் தொடர்பான ஜனாதிபதி செயலணியின் உறுப்பினர் எல்லாவல மேதானந்த தேரர் குறிப்பிட்டுள்ள கருத்தை சிங்கள அரசும் பறைசாற்றி வந்தது. இது முற்றிலும் தவறானது என கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்ன தெரிவித்திருந்தார்.

அவரின் மறைவின் பின்னரும் இலங்கையின் யதார்த்த அரசியலையும் ஆளுமையையும் அவர் வரலாற்றில் பதிவு செய்துள்ளார்.

# தமிழ் மக்களின் தேசிய இனப் பிரச்சினைக்கு குரல் கொடுத்தவர் விக்கிரமபாகு கருணாரத்ன

## புளொட் அஞ்சலிச் செய்தியில் தெரிவிப்பு



தமிழ் மக்களின் தேசிய இனப் பிரச்சினைக்காக தொடர்ந்து குரல் கொடுத்து வந்த, சிங்கள சமூகத்தின் இடதுசாரித் தலைவர் தோழர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்னவுக்கு தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் (புளொட்) தனது ஆழ்ந்த அஞ்சலிகளை தெரிவித்துக் கொள்கிறது.

இது தொடர்பாக அவர்கள் விடுத்துள்ள அஞ்சலிச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

நவ சமசமாஜ கட்சியின் தலைவரான கருணாரத்தின 81 ஆம் வயதில் காலமானார். சிறுபான்மை இனங்களுக்கு சுய நிர்ணய உரிமை வழங்கப்பட வேண்டும் என்பதில் உறுதியாக இருந்ததோடு, எப்போதும் தமிழ் மக்களுக்கு ஆதரவான நிலைப்பாட்டைக் கொண்டிருந்தார்.

கழகத்தின் தலைமைகளுடன் மிகவும் நெருக்கமான உறவுகளைக் கொண்டிருந்த அவர், தனது இறுதிக் காலம் வரையிலும் அவ் உறவுகளை பேணி வந்தார்.

தேசிய இனப் பிரச்சினைக்கு நிரந்தரமான அரசியல் தீர்வு, தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை, காணாமல் போனவர்கள் தொடர்பான விசாரணைகள், இராணுவத்தின் வசமிருக்கும் நிலங்களை உரிமையாளர்களுக்கு மீள கையளித்தல் போன்ற விடயங்களுக்காக தென்னிலங்கையில் பல சந்தர்ப்பங்களில் பல இடங்களில், குறிப்பாக தலைநகர் கொழும்பில் போராட்டங்களை முன்னெடுத்திருந்தார்.

தமிழ் மக்களின் நேர்மையான சிங்கள நண்பர்கள் எனும் பட்டியலில் அமரர் தோழர் விக்கிரமபாகு கருணாரத்ன என்றென்றும் தனித்துவமான இடம் இருக்கும் என்பது எமது நம்பிக்கை.- என்றுள்ளது.



# திருப்புகழ் மாநாட்டு விருது !

(வி.ரி.சகாதேவராஜா)

வரலாற்று பிரசித்தி பெற்ற திருக்கோவில் சித்திர வேலாயுதர் சுவாமி ஆலய நிர்வாகத்தினர் அங்கு இடம்பெற்ற திருப்புகழ் மாநாட்டுக்கு வழங்கிய மகத்தான ஒத்துழைப்புக்காக விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளனர்.

கொடியேற்ற தினத்தன்று இந்த விருது திருப்புகழ் மாநாட்டை நடத்திய 3 இந்து அமைப்புகளால் வழங்கப்பட்டது.

திருக்கோவில் சித்திர வேலாயுதர் சுவாமி ஆலய பரிபாலன சபை தலைவர் சுந்தரலிங்கம் சுரேஸ் தலைமையிலான குழுவினர் அந்த விருதை பெற்றுக் கொண்டனர்.

கொடியேற்ற தினமன்று இந்த விருது வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# ரணில் - பஸில் இன்று இரவு தீர்க்கமான சந்திப்பு!

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் ஸ்தாபகர் பஸில் ராஜபக்ஷவுக்கும் இடையில் இன்று இரவு விசேட சந்திப்பு நடைபெறவுள்ளது.

ஜனாதிபதித் தேர்தலில் தமக்கு ஆதரவு வழங்கமாறு பஸில் ராஜபக்ஷவிடம் ரணில் கோரியுள்ளார். எனினும், மொட்டுக் கட்சியின் நிலைப்பாட்டை பஸில் உறுதியாகத் தெரிவிக்கவில்லை.



இருவருக்கும் இடையில் நேற்று இரவும் சந்திப்பொன்று நடைபெற்றது.

எனவே, ஜனாதிபதித் தேர்தலில் மொட்டுக் கட்சியின் ஆதரவு ரணில் விக்கிரமசிங்கவுக்கு கிடைக்கப் பெறுமா அல்லது இல்லையா என்பது இன்றைய கூட்டத்தின் பின்னர் தெரியவரும் என அறியமுடிகின்றது.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### தமிழருக்காக...

கொழும்பு ஆனந்தா கல்லூரியிலும் பயின்றார்.

அதன்பின்னர் பல்கலைக்கழகத்தில் பொறியியல் பட்டப்படிப்பைப் பூர்த்தி செய்ததுடன், இங்கிலாந்தின் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் 1970ஆம் ஆண்டு கலாநிதிப் பட்டம் பெற்றார்.

இதனையடுத்து நாடு திரும்பிய அவர், பேராதனைப் பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராகப் பணியாற்றினார்.

1962ஆம் ஆண்டு விக்கிரமபாகு கருணாரத்ன, லங்கா சம சமாஜக் கட்சியில் இணைந்து தனது அரசியல் பயணத்தை ஆரம்பித்தார்.

தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமை, தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை உள்ளிட்ட பல்வேறு விடயங்களை அவர் தனது காலத்தில் வலியுறுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

எங்கு அநீதி இழைக்கப்பட்டாலும், ஜனநாயக உரிமைகள் மறுக்கப்பட்டாலும் அங்கு நீதியின் குரலாக நின்று களமாடிய ஒரு சிறந்த இடதுசாரி அரசியல் தலைவர்தான் கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்ன.

பதவிகளுக்காகவும், சலுகைகளுக்காகவும் கொள்கை துறந்து - கோட்பாடு மறந்து குரங்குகள்போல் அங்கும் இங்கும் தாவும் கோமாளி அரசியலை நிராகரிக்கும் - வெறுக்கும் கொள்கையுடன் செயற்படும் அரசியல்வாதிகளுள் விக்கிரபாகுவும் ஒருவர்.

தமிழ்த் தேசியத்துக்காகவும், தமிழர்களின் உரிமைகளுக்காகவும் இணைந்த வடக்கு, கிழக்கில் சமஷ்டி தீர்வுக்காகவும் தென்னிலங்கையில் இருந்து ஓங்கி ஒலித்த குரலே பாகு தோழர்.

இதனால் அவர் சந்தித்த நெருக்கடிகள், அச்சுறுத்தல்கள் ஏராளம். சிங்களப் புலி, துரோகி என்றெல்லாம் கடும்போக்குடைய இனவாதிகள் அவர் மீது சொற்கணைகளைத் தொடுத்தனர்.

2012 இல் தி.மு.க. தலைவர் கருணாநிதி தலைமையில் சென்னையில் நடைபெற்ற டெசோ மாநாட்டுக்கு விக்கிரமபாகு கருணாரத்னவும் அழைக்கப்பட்டிருந்தார். இதனால் தென்னிலங்கையில் அவருக்கு எதிராக சில தரப்பினர் போர்க்கொடி தூக்கினர். போராட்டங்களை நடத்தினர். எதற்கும் அவர் அஞ்சவில்லை. மாநாட்டில் பங்கேற்று, ஈழத் தமிழர்களுக்கான அரசியல் தீர்வின் முக்கியத்துவத்தை அவர் வலியுறுத்தினார்.

ஈழத் தமிழர்களுக்காக மட்டுமல்ல மலையகத் தமிழர்களின் அரசியல், பொருளாதார, சமூக விடுதலைக்காகவும் பாகுவின் குரல் ஓங்கி ஒலித்தது. சம்பள உயர்வுக்கான போராட்டங்களில் பங்கேற்று தாக்குதலுக்கும் அவர் இலக்காகினார்.

அவரிடம் இன, மத பேதம் கிடையாது, கொள்கைக்கு முதலிடம். மக்களுக்கான அரசியலை அவர் செய்தார். மக்களை வைத்து அரசியல் செய்ய அவர் முற்படவில்லை. அதனால்தான் அவர் பிரதிநிதித்துவப்படுத்திய நவ சம சமாஜக் கட்சிக்குரிய வாக்கு வங்கி குறிப்பிட்டுக் கூறும் அளவுக்கு இல்லை. ஆனால், கொள்கை மாறா அரசியல் பயணத்தால் இன்றும் அவர் போற்றப்படுகின்றார்.

அவர் ஆட்சியாளர்களுக்கு சிம்ம சொப்பனமாக விளங்கியவர். அரசியல் பழிவாங்கலுக்காக அவரின் விரிவுரையாளர் பதவி பறிக்கப்பட்டது. நல்லாட்சியின்போது அவருக்கு இழப்பீடு வழங்க அமைச்சரவை ஒப்புதலுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

ஜனாதிபதித் தேர்தலில் அவர் போட்டியிட்டார். மேல் மாகாண சபை உறுப்பினராக அவர் இருந்தார். கடைசியாக தெஹிவளை - கல்கிசை மாநகர சபை உறுப்பினராக அவர் இருந்தார். மனோ கணேசன் தலைமையிலான ஜனநாயக மக்கள் முன்னணியுடன் கூட்டணி வைத்து ஏணி சின்னத்தில் போட்டியிட்டு அவர் வெற்றி பெற்றார்.

### விஜயதாஸவும்...

இன்று உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளார்.

மக்கள் கூட்டணியின் சார்பில் வேட்பாளராகக் களமிறங்குவதாகவும், சின்னத்தைப் பின்னர் அறிவிப்பதாகவும் விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்தார்.

இலங்கையினதும், இலங்கை மக்களினதும் வெற்றியை முன்னிறுத்தியே எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் வேட்பாளராகக் களமிறங்குவதாக விஜயதாஸ ராஜபக்ஷ மேலும் குறிப்பிட்டுள்ளார்.

"உங்களது விதியைத் தீர்மானிக்கும் உரிமையை அரசியல்வாதிகளிடம் கையளித்துப் பார்த்துக்கொண்டிருப்பதால் எஞ்சியது துன்பம் மாத்திரமே. உலகம் மாற்றமடைவதைப் பார்ப்பதற்கு விரும்பினால் அம்மாற்றத்தை உங்களால் மாத்திரமே ஏற்படுத்தமுடியும்." - என்றும் நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ நாட்டு மக்களுக்கு அறைகூவல் விடுத்துள்ளார்.

இதேவேளை, இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் வேட்பாளராகக் களமிறங்கப்போவதாக பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா எம்.பியும் இன்று உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளார்.

76 வருடங்களாகப் பல்வேறு அரசியல் கட்சிகளும் நாட்டை வங்குரோத்து நிலைமைக்கு இட்டுச் சென்றன என்று அவர் தனது பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

ஊழலற்ற நாட்டைக் கட்டியெழுப்புவதற்கான தேவையுள்ளது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நாட்டின் வருமானத்தை அதிகரிப்பதற்காக இயற்கை வளங்களைப் பயன்படுத்த வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையை முன்னேற்றுவதற்கு தம்முடன் இணைந்துகொள்ளுமாறும் சரத் பொன்சேகா நாட்டு மக்களுக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

### முன்னாள் போராளியான...

சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ள நிலையில், இது தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

முன்னாள் போராளியும் ஊடகவியலாளரும் வவுனியா பிரஜைகள் குழுவின் ஊடகப் பேச்சாளரும் அரசியல் சமூக செயற்பாட்டாளருமான ஈழம் சேகுவேரா (இசைப்பிரியன்) என்பவரே இன்று காலை சடலமாக மீட்கப்பட்டார்.

சுயாதீன ஊடகவியலாளராகவும், பத்தி எழுத்தாளராகவும், அரசியல் விமர்சகராகவும், கலைஞனாகவும் பல்துறைகளிலும் அவர் கால் பதித்தவர்.

வன்னியில் புனிதபூமி சிறுவர் இல்லத்தில் வளர்ந்து பாடசாலைப் படிப்பையும் முடித்து நிதர்சனத்தில் அவர் பணி புரிந்துள்ளார்.

அவர் வடபோர்முனை பயிற்சி ஆசிரியராக இருந்து இறுதிப் போரில் காணாமல் ஆக்கப்பட்ட செஞ்சுடரின் சகோதரரும் ஆவார்.

நிமிர்வு, சமூகம் ஊடகம், எழுநா உள்ளிட்ட ஊடகங்களிலும் அவர் ஊடகவியலாளராகப் பணியாற்றியுள்ளார்.

ஊடகப் பணிகளை அர்ப்பணிப்புடனும், ஈடுபாட்டுடனும் செய்யும் ஊடகத் தோழமையின் திடீர் இழப்பு ஊடகத்துறை சமூகத்தினருக்கு ஆழ்ந்த கவலையை ஏற்படுத்தியுள்ளது.


Muhurtham
Jewels
PRESENTS
PRADEEP
kumar
BUY TICKETS ON
eventbrite
SCAN NOW
JULY
27
2024
LIVE IN
TORONTO
CANADA EVENT CENTER
EVENT BY
tamil one
SV MEDIA
RADIO PARTNER
PRINTING PARTNER
E PAPER PARTNER
DESIGN BY
தளம் FM
88.9 HD3 & 105.9
INK DRIP
முரசு
DESIGN
WOLF.CA

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## உண்மையான இடதுசாரி

தனது கொள்கைக் கோட்பாட்டு நிலையில் மாறாது - சிறுபான்மையின மக்களுக்கு நீதி வழங்க வேண்டி - அறச் சீற்றத்துடன் குரல் எழுப்பிய சிங்கள பெருமகன் ஒருவர் காலமானார்.

தமிழ் தேசிய இனம் உண்மை உறவை - உற்ற நெஞ்சத்தை - இழந்திருக்கின்றது.

சிரேஷ்ட அரசியல்வாதியான நவசமசமாஜக் கட்சித் தலைவர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்னவின் மறைவு ஈழத் தமிழர்களைப் பொறுத்தவரை அவர்களின் நியாயமான அபிலாசைகளை முழுமனதுடன் புரிந்து கொண்டு, அதற்காகக் குரல் எழுப்பிய ஓர் ஒப்பற்ற தலைவனின் நிரப்ப முடியாத பிரிவுதான்.

சிறுபான்மை மக்களுக்காக - குறிப்பாக தமிழர்களுக்காக - பேரினவாதிகள் மத்தியில் துணிச்சலுடன் குரல் எழுப்பிய 'தனிப்படை' கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்ன. இனவாதத்தை ஒதுக்கி வைத்துவிட்டு, நீதியுடன் விடயங்களை அணுகிய அவர், அதனால் தம் நெஞ்சில் நியாயமாகப்பட்டவற்றை வெளிப்படையாக ஓங்கி உரைத்து வந்தார். அதற்காகத் தெற்கில் பேரினவாதிகள் மத்தியில் கடும் எதிர்ப்பை எதிர்கொண்ட போதும், யாருக்காகவும் அந்த நிலைப்பாட்டை சமரசம் செய்து கொள்ள அவர் இணங்கவில்லை. தனக்குச் சரி எனப் பட்டதை - சிறுபான்மையினருக்கான நீதிக்காக குரல் எழுப்பும் தன் நிலைப்பாட்டை - சூழ்நிலைகள், சந்தர்ப்பங்கள் பாராது அடித்து கூறுவதில் துணிச்சல் மிக்கவராக அவர் இருந்தார்.

தேசிய இனப் பிரச்சனை விடயத்தில் தமிழர்களின் தாயகம், தனித்துவம், சுயநிர்ணயம் போன்றவற்றை கடைசி வரை அங்கீகரித்து, அந்த நிலைப்பாட்டில் நின்ற தெற்கின் கடைசி இடதுசாரி அரசியல்வாதி அவர்தான்.

இலங்கைப் பல்கலைக்கழகத்தின் பொறியியல் பட்டதாரியான விக்கிரமபாகு கருணாரத்ன கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் கலாநிதி பட்டம் பெற்றவர். சுமார் இரு தசாப்த காலம் பேராதனை பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராகக் கடமையாற்றினார்.

நிறைவேற்றதிகாரத்திற்கும், ஆட்சியாளர்களின் எதேச்சாதிகார அடக்குமுறை நடவடிக்கைகளுக்கும் எதிராகத் தொடர்ந்து குரல் கொடுத்து வந்தமையினால் பல்கலைக்கழகத் தொழிலை இழந்தார்.

ஆயினும் தமது கொள்கை கோட்பாட்டில் இருந்து எந்த அழுத்தத்திற்காகவும் விலகாமல் அதில் தனி ஆளுமையுடன் நின்று போராடினார்.

1988 இலும் 2010 இலும் ஜனாதிபதி தேர்தல்களில் விக்கிரமபாகு கருணாரத்ன போட்டியிட்டார் - வெற்றிக்காக அல்ல, கொள்கைக்காக.

இலங்கை அரசியலில் கோலோச்சிய கல்விமான்களில் விக்ரமபாகுவும் ஒருவர்.

அவருடன் இளம் வயதில் அரசியல் களம் புகுந்த தோழர் வாசுதேவ நாணயக்கார போன்ற இடதுசாரிகள் யாவரும் காலகதியில் அரச பதவிகளுக்காகவும், வசதிகளுக்காகவும் கொள்கைக் கோட்பாடுகளை மாற்றிய போதும், அந்தச் சலுகைகள், அற்பத்தனங்களுக்கு வளைந்து கொடுக்காமல், தான் நம்பி ஏற்றுக் கொண்ட இடதுசாரித்துவத்தில் உறுதியாக நின்றவர் விக்கிரமபாகு கருணாரத்ன. அதன்படி முன்மாதிரியாக வாழ்ந்தும் காட்டினார்.

அடக்கப்பட்ட தமிழர் தேசிய இனத்தின் விடுதலைக்காக உழைக்க வேண்டும் என்ற இயல்புணர்வு - மனவூக்கம் - அவர் மனதில் கடைசிக் காலம் வரை - கடைசி மூச்சு வரை - ஆழமாக வேரோடியிருந்தது.

இனவாத யுத்தம் நாட்டை அழித்துக் கொண்டிருந்தபோது - தென்னிலங்கையில் பேரினவாத வெறி முழு மூர்க்கம் கொண்டு சந்நதமாடிக் கொண்டிருந்த சமயத்தில் - நாட்டின் பேரழிவுக்கு இந்தப் பேரினவாத குரூர வெறித்தனமே காரணம் என்பதை வெளிப்படையாகவும் அப்பட்டமாகவும் உரத்தும் தென்னிலங்கையில் உரைக்கும் துணிச்சலும் நேர்மைத்தனமும் அவரிடம் மட்டுமே இருந்தன என்று கூறினால் அது மிகையாகாது.

நலிவுற்ற தமிழினத்திற்காக உறுதியுடன் குரல் எழுப்பி நின்ற ஓர் உண்மைச் சகோதரனை தமிழினம் இழந்து நிற்கிறது.

போய் வாருங்கள் சகோதரரே! உங்கள் அறச் சீற்ற முழக்கம் என்றும் தமிழருக்கு ஊக்கமாய் எதிரொலிக்கும் என்பது நிச்சயம்.



## அர்ஜன் பெரேரா ஞாபகார்த்த கிண்ணம்

# மொரட்டுவ செபஸ்தியான் ரெனிஸில் சம்பியன்



(அஸ்ஹர் இப்றாஹிம்)

இலங்கை ரெனிஸ் சம்மேளனம் ஒழுங்கு செய்திருந்த அர்ஜன் பெரேரா ஞாபகார்த்த கிண்ணத்துக்கான தேசிய மட்ட ரெனிஸ் போட்டியில் 18 வயதுக்கு உட்பட்ட டிவிசன் ஒன்று போட்டியில் மொரட்டுவ புனித செபஸ்தியான் கல்லூரி சகலதுறை சம்பியன்களாக தெரிவு செய்யப்பட்டுள்ளது.

தனி நபர்களுக்கான போட்டியில் இந்தக் கல்லூரி மாணவர்களான கெவின் பெர்ணான்டோ, அமீச திஸாநாயக ஆகியோர் சிறப்பாட்டக்காரர்களாக தெரிவு செய்யப்பட்டனர்.





# மகாராஷ்டிர சாயி ஆலயத்தில் கௌரவிப்பு

வட இந்திய மகாராஷ்டிர மாநிலத்தில் உள்ள சீரடி சாயி பாபா ஆலயத்தில் குரு பூர்ணிமா சமய அனுஷ்டானங்களின் நிகழ்வு இடம்பெற்றது.

நிகழ்வில் கொழும்பு புதுச்செட்டித் தெரு சீரடி சாய்பாபா ஆலய பிரதம அறங்காவலர் எஸ்.என்.உதயநாயகன் தலைமையில் பக்தர்கள் குழுவினர் கலந்து கொண்டு பஜனை நிகழ்த்தினர்.

இதன்போது, மகாராஷ்டிர சாயி ஆலயத்தின் சார்பில் தலைமை அதிகாரியால் அறங்காவலர் உதயநாயகன் பாராட்டி கௌரவிக்கப்பட்டார்.






# கல்முனையில் கை கழுவுதல் நிகழ்வு

(வி.ரி. சகாதேவராஜா)

உலக கைகழுவுதல் தினத்தை முன்னிட்டு கல்முனை ஆதார வைத்தியசாலையில் கை கழுவுதல் நிகழ்வு நேற்று (24) புதன்கிழமை இடம் பெற்றது.

இந்த நிகழ்வு வைத்தியசாலையின் பிரதி பணிப்பாளர் டாக்டர் எஸ் எல்.தாஹிரா தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் வைத்தியசாலையின் திட்டமிடல் பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் ஜே.மதன், தாதிய பரிபாலகர்கள் மற்றும் பொறுப்பு தாதிய உத்தியோகத்தரகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்த நிகழ்வு பிரதி பணிப்பாளர் டாக்டர் தாஹிராவின் தலைமை உரையுடன் ஆரம்பித்தது. வைத்தியசாலையின் திட்டமிடல் பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் மதன் சிறப்பு விரிவுரை வழங்கினார். மற்றும் உத்தியோகத்தர்களுக்கான செய்முறைப் பயிற்சியும் வழங்கப்பட்டது.





# பெண் ஏன் அடிமையானாள்?

இன்றைக்கு தினசரிகளை எடுத்துப் பார்த்தால், பெண்கள் மீதான பாலியல் வன்கொடுமைகளே தலைப்புச் செய்திகளாகி விட்டன. இவற்றைப் படித்து விட்டு இயல்பாகக் கடந்துபோகும் மன நிலைக்கும் சமூகம் வந்துவிட்டது துயரம்தான்.

இதை ஒரே நாளில் மாற்றிவிட முடியாது. ஆண், பெண் ஆகிய இரு பாலினம் குறித்த புரிதலைச் சமூகத்துக்குக் கற்பிக்க வேண்டியது அவசியம். குறிப் பாகப் பெண் மீது புனிதம் என்ற பெயரில் சுமத்தப்பட்டிருப்பவை சுமைகளே என்று இளம் தலைமுறையினருக்குச் சொல்ல வேண்டும். இந்த வேலையைத் தந்தை பெரியாரின் எழுத்துகள் எந் தத் தயக்கமும் இன்றி சொல்கின்றன. அதிலும் பெண் ஏன் அடிமையானாள்? எனும் நூல், பெண்களே தங்களைப் பற்றிய கற்பிதங்களிலல் இருந்து வெளிவர வேண்டிய விடயங்களையும் இணைத்துப் பேசியிருப்பதாக பெண் ஏன் அடிமையானாள் எனும் இந்தப் புத்தகச் சுருக்கம் காணப்படுகின்றது.

இந்தப் புத்தகத்தில், கற்பு, வள்ளுவரும் கற்பும், காதல், கல்யாண விடுதலை, மறுமணம் தவறல்ல, விபச்சாரம், விதவைகள் நிலைமை, சொத்துரிமை, கர்ப்பத் தடை, பெண்கள் விடுதலைக்கு ஆண்மை அழிய வேண்டும் ஆகிய தலைப்புகளில் 10 விட யங்களை அவர் அளித்துள்ளார்.

கருத்துக்கள் ஒவ்வொன்றும் எக்காலத்துக்கும் பொருந்;துவனவாகவே உள்ளன எனலாம். இந்த நிலைமைகளில் பல இக்காலத்திலும் தொடர்வதும் வருந்தத்தக்கதே. இந்த வகையில் ஒவ்வொரு அத்தியாயங்களிலும் உள்ள விடயங்களை விரிவாகப் பாலியல் நோக்கோடு நோக்குவமாக இருந்தால் இப்புத்தகத்தில் முதலாவது அத்தியாயமாகிய கற்பு என்னும் விடயத்தின் முக்கிய கருத்தெல்லாம் மக்கள் ஆண் - பெண் என்ற இரு சாராரில் பெண்க ளுக்கு மாத்திரமே அது (கற்பு) வலியுறுத்தப்பட் டிருக்கிறது.

இந்த வலியுறுத்தலே பெண்ணை அடிமையாக்கப் பெரிதும் காரணமாய் வந்திருக்கிறது என்றும் ஆண்-பெண் இருவரும் சரிசமமான சுதந்திரத்துடன் வாழ வேண்டும் என்கிற நிலைமை ஏற்பட வேண்டுமானால் மேற்கண்ட கற்பு என்பதன் அடிப்படையான இலட் சியமும் கொள்கையும் மாற்றப்பட்டு அது விடயத்தில் ஆண் - பெண் இருவருக்கும் ஒன்று போன்ற நீதி ஏற்படுத ;த வேண்டும் என்பதை வலியுறுத்துவதாகும்.

இரண்டாவது அத்தியாயமான வள்ளுவரும் கற்பும் என்னும் அத்தியாயத்தின் நோக்கம் என்ன என்றால், நீதி நூல்கள் என்பவை எப்படிப்பட்ட பெரி யோர்களால் எழுதப்பட்டவை என்றாலும் அவை அக்கால நிலையையும் எழுதப்பட்ட கூட்டத்தின் சௌகரியங்களையும் அனுசரித்து எழுதப்பட்டது என்றும் ஆதலால் எந்தக் கொள்கையும் எக்காலத் திலும் எல்லாத் தேசத்துக்கும் எல்லோருக்கும் சௌகரியமாயிருக்கும் என்றும் கருதிக் கண் மூடித்தனமாய் குரங்குப் பிடிவாதமாய்ப் பின்பற்றக் கூடாது என்றும் வலியுறுத்த எழுதப்பட்டதாகும்.

கர்ப்பமாக பத்து மாதம் சுமந்து பிள்ளை பெறுகின்ற குணம் பெண்களுக்கு இருப்பதாலேயே பெண்கள் நிலை ஆண்களைவிட எந்தவிதத்திலும் அதாவது வ PIம், கோபம், ஆளுந்திறம், வன்மை முதலியவைக ளில் மாறுபட்டு விட வேண்டியதில்லை என்றே சொல்வோம்.

கர்ப்பம் தரித்துப் பிள்ளை பெறாத காரணத்தாலேயே ஆண் மக்களுக்கு அன்பும், சாந்தமும், பேணும்திறமும் பெண்களை விட மாறுபட்டதாகி விடாதென்றும் சொல்லுவோம். உண்மையான சமத்துவத்துக்கு மதிப்புக் கொடுப்போமானால் உண்மையான அன்பு இருக்குமானால், பிள்ளையைச் சுமந்து பெறும் வேலை ஒன்றைத் தவிர மற்ற காரியங்கள் இரு பாலருக்கும் ஒன்று போலவே இருக்கும். இங்கு பால்நிலை ரீதியான வேறுபாடு என்று சொல்வதற்கு எதுவும் இல்லை.

மூன்றாவது அத்தியாயமான காதல் என்பது ஒரு தெய்வீகச் சக்தியால் ஏற்பட்டதென்றும் அது என்றும் மாற்றப்பட முடியாதது என்றும் ஆதலால் ஒரு தடவை காதல் என்பது ஏற்பட்டுவிட்டால் எந்தக் காரணத்தைக் கொண்டும் பின்னர் அதை மாற்றிக்

தொடர்ச்சி▼

# பெண் ஏன் அடிமையானாள்?

தொடர்ச்சி▲

கொள்ளக் கூடாது என்றும் சொல்லப்படும்.

நிர்ப்பந்தக் காதலைப் பொய்யென்று எடுத்துக் காட்டவும். காதல் என்பது ஒரு ஆசையென்றும் அந்த ஆசை ஏற்படவும் மறைந்து போகவுமான தன்மை கொண்டதென்றும் அதுவும் ஆசைப்படுபவர்கள் திருப்தியையும் நலத்தையும் பலத்தையுமே அத்;திவாரமாய்க் கொண்டதே ஒழிய வேறெதையும் பொறுத்ததல்ல என்றும் எடுத்துக்காட்ட எழுதப் பட்டதாகும்.

அன்பு, ஆசை, நட்பு என்பவற்;றின் பொருளைத் தவிர வேறு பொருளைக் கொண்டதென்று சொல்லும் படியான காதல் என்னும் ஒரு தனித்தன்மை ஆண்-பெண் சம்பந்தத்தில் இல்லை என்பதை விவரிப்பதாக இந்த அத்தியாயத்தில் எழுதப்பட்டுள்ளது.

நான்காவது அத்தியாயமான கல்யாண விடுதலை என்பது அது போலவே, அதாவது கல்யாணம் என்பது ஆண் - பெண் இருவர்களுடைய வாழ்க்கை சௌக ரியத்துக்கு ஏற்ப ஒரு ஒப்பந்த விழாவே ஒழிய அதில் எந்த விதத் தெய்வீகத் தன்மை என்பதும் இருக்க நியாயமில்லை என்பதையும் அப்படிப்பட்ட கல்யாணம் என்பதும் இரு பாலார்களுடைய வாழ்க் கைச் சௌகரியத்துக்கும் ஒத்துவரவில்லையானால், இரத்து செய்துவிடத்தக்கதே என்பதையும் விளக்க முற்;படுகின்றார்.

அது மட்டுமன்றி ஐந்தாவது அத்தியாயமாகிய மறுமணம் தவறல்ல என்பதும் முன் அத்தியாயத்தை அனுசரித்தும் ஒரு தரம் கல்யாணம் செய்வோர் மறுபடியும் கல்யாணம் செய்து கொண்டால் செய்து கொள்வது தவறு என்று சொல்வதைக் கண்டித்தும் கல்யாணம் என்பது முன் குறிப்பிட்டது போல ஆண் - பெண் இருவர் வாழ்க்கை. சௌகரியத்துக்கும் சந்தோசத்துக்கும் ஏற்;றதே ஒழிய வேறில்லை என்றும் அது அப்படி இல்லாமல் போகுமாயின் ஒரு தடவை கல்யாணம் செய்து கொண்டோமே இரண்டு பேரும் உயிருடன் இருக்கின்றோமே இனி எப்படி இதில் யாராவது ஒருவர் மறுமணம் செய்து கொள்வது என்று மயங்காமலும் இந்த நிலையில் முன் மணம் செய்து கொண்ட பெண்ணின ; கதியோ அல்லது ஆணின் கதியோ என்ன ஆவது என்பதாய் கருதி ஒருவருக்கு அசௌகரியம் ஏற்படுமே என்ப தற்காக ஒருவர் கஸ்டப்படுவது என்பதைக் கண்டிக் கவும் மறுமண முறையை இருவரும் கைக்கொண்டால் யாருக்கும் கஸ்டம் ஏற்படாது என்பதை வலியுறுத் தவும் என்னென்ன சந்தர்ப்பங்களில் மறுமணம் செய்துகொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் விளக்கவும் எழுதப்பட்டதாகும்.

ஆறாவது அத்தியாயமானது விபச்சாரம் என்னும் தலைப்புக் கொண்ட அத்தியாயம். விபச்சாரம் என் னும் குற்றம் சுமத்தப்படுவதானது பெண்ணுக்கே உரியதாயிருக்கின்றதே தவிர, அது உலக வழக்கில் ஆணுக்குச் சம்பந்தப்படுவதில்லை என்றும் இதனால் ஆண்கள் தாராளமாய் விபச்சாரம் செய்யவும் அதனால் பெண்களுக்கு கஸ்டம், துன்பம், வியாதி, வாழ்க்கை, இன்பமின்மை முதலிய துன்பங்கள் ஏற்பட இடமாகின்றது என்றும் விபச்சாரம் என்பது எந்தப் பொருளிலாவது குற்றமாகுமானால் அது இருபாலருக்கும் சமமாய் இருக்க வேண்டும் என்றும் வலியுறுத்தவே அநேக தத்துவ அனுபவ உண்மை களைக் கொண்டு எழுதப்பட்டவையாகும் என வலியுறுத்துகின்றார்.

விபச்சாரம் என்ற சொல் பெண்களைக் குறி வைத்துத் தாக்கும் அம்புகளாக மாற்றப்பட்டுள்ளன. இந்தச் செயலுக்குத் துணை போகும் ஆணை வசை பாடுவதற்கு எந்தச் சொல்லும் இல்லை. சமுதாயத்தில் சமஅளவு வாழும் பெண்கள் மீது வன்முறையான சொற்பிரயோகம் சரியானதுதானா என்று மனசாட்சி உள்ள ஒவ்வொருவரும் கேட்டுக் கொள்ள வேண்டும். ஒரு சில இடங்களில் ஒன்றுக்கு மேற்பட்ட ஆண்கள் ஒரு பெண்ணை மனைவியாக ஏற்;படுத்திக் கொள் கின்றனர். அதை முறையான வாழ்க்கை என்று பேசும் இந்தச் சமூகம் பிழைப்புக்கு வழியில்லாமல் தன் உடலை விற்கும் அவலத்துக்குள் தள்ளப்படும் பெண்களைக் கடுமையாக விமர்சிக்கிறது. பிழைப் புக்காகப் பொய் பேசும் வியாபாரியையோ, வழக்க றிஞரையோ வேறு விதமாக விமர்சிப்பதில்லை.

ஏழாவது அத்தியாயமாகிய விதவைகள் நிலைமை என்னும் தலைப்புக் கொண்ட அத்;தியாயமானது பெண்கள் விதவைத் தன்மையால் அனுபவிக்கும் கொடுமையை எடுத்துக்காட்டவும் அவர்களுக்கு மறுமணம் செய்ய வேண்டியது அவசியம் என்பதை வலியுறுத்தவும் எழுதப்பட்டதாகும். மனிதப் பிறவி கொண்ட ஆணும் பெண்ணும் இயற்;கைத் தத்துவத் திலும் சமுதாய வாழ்க்கைத் தன்மையிலும் ஒருவருக் கொருவர் தாழ்ந்தவர்களல்ல என்பதை அறிவுடைய உலகம் மறுப்பதற்கு முடியாது. அங்க அமைப்பிலன்றி ரூ அறிவின் பெருக்கிலோ விரத்தின் மாண்பிலோ ஆண் - பெண்களுக்குள் ஏற்றத் தாழ்வை வித்தியாசம் எதுவும் காணஇயலாது.ஆடவரிலும் சரி ரூபவ் பெண்டிரிலும் சரிரூபவ் முறையே அறிவாளிகளும் ரூபவ் ஆண்மை யுடையோரும்ரூபவ்

அறிவிலிகளும்ரூபவ் பேடிகளும் உண்டு

எட்டாவது அத்தியாயமாகிய சொத்துரிமை என்னும் தலைப்புக் கொண்ட அத்தியாயமானது பெண்களுக்குச் சுதந்திரம் ஏற்பட வேண்டுமானால் அவர்கள் ஆண்களுடைய அடிமைகள் அல்ல என்றும் ஆண்களைப் போலவே வாழ்க்கையில் சகல துறை களிலும் சம அந்தஸ்துடையவர்கள் என்று சொல் லப்பட வேண்டியவர்களானால் உலகச் செல்வங் களுக்கும் போக போக்கியங்களுக்கும். ஆண்களைப் போலவே பெண்களும் உடைமையாளராக வேண்டும் என்பதை வலியுறுத்தவும் பெற்றோர்களுடைய சொத்துகளுக்குப் பெண்களும் ஆண்களைப் போலவே பங்குபெற உரிமையுடையவர்கள் ஆகவேண்டும் என்பதையும் வலியுறுத்தவும் எழுதப்பட்டதாகும்.

ஒன்பதாவது, பத்தாவது அத்;தியாயங்களாகிய கர்ப்பத் தடை, பெண்கள் விடுதலைக்கு ஆண்மை அழிய வேண்டும் என்கிற தலைப்புகளை முறையே கொண்ட அத்தியாயங்களானவை கர்ப்பத்தாலும் பிள்ளைகளைப் பெறுவதாலும் பெண்களுக்கு ஏற்படும் கஸ்டங்களையும், அடிமைத் தனங்களையும் எடுத்துக்காட்டவும் மற்றும் பிள்ளைகளை அதிகமாகப் பெறுவதால் ஆண் - பெண் இவர்களுக்குள்ள கஸ்டங்களையும் எடுத்துக்காட்டுவதுடன் பெண்கள் நலத்துக்கு ஆண்களால் - ஆண்கள் முயற்சியால் ஒரு நாளும் நன்மை ஏற்பட்டுவிடாது என்றும் பெண்கள் தங்களை ஆண்களுக்கு அடிமையாக இருக்கவே கடவுள் படைத்தார் என்பதாக நினைத்துக் கொண்டிருக்கும் எண்ணத்தை அடியோடு விட்டுவிட்டு தாங்களும் ஆண்களுக்குச் சமமானவர்கள் என்றும் எவ்விதத்திலும் தாழ்ந்தவர்கள் அல்ல என்றும் கருதிக் கொண்டு தங்களுக்குத் தாங்களே பாடுபட வேண்டும் என்பதை வலியுறுத்தவே எழுதப்பட்ட வையாகும்.

இவ்வாறு பெண் ஏன் அடிமையானாள் என்னும்

தொடர்ச்சி▼

# பெண் ஏன் அடிமையானாள்?

தொடர்ச்சி▲

புத்தகத்தின் பத்து அத்தியாயங்களும் பல்வேறு வகையான தத்துவப் பொருளை கொண்டுள்ளன. இவ்வகையில் பெண் அடிமைத் தனத்தைக் கையகப் படுத்தி வலுவூட்டத் துடிக்கும் மதத்தையும் ஆண்க ளையும் சாடுவதுடன் நிற்காமல் பெண்களையே காரணங்களாக்கி சதிராடியுள்ளார் பதிவிரதைகளை தந்தை பெரியார்!

சொத்துரிமை குறித்து அவர் முன்வைக்கும் வாதங்களை ஏற்றுக் கொள்ளும் மனநிலை ஏனோ இன்றளவும் ஆண்களுக்கு வராமல் இருப்பது வெட்கக்கேடானது. நாட்டின் சுதந்திரத்துக்கு முன்ன தாகவே பெண்கள் சுதந்திரத்தின் இன்றிமையாமையை வலியுறுத்திய விதத்திலேயே பெரியார் மிளிர்கிறார் எனலாம். பெண் அடிமைத் தனத்துடன் தாழ்த்தப்பட்ட மக்களின் அடிமைத் தனத்தையும் பொருத்;திப் பார்க்கும் மனநிலை போற்றத்தக்கதே.

“பெண் விடுதலை” என்று பெயர் சூட்டாமல் “பெண் ஏன் அடிமையானாள்?” என்று வினாவைத் தலைப்பாக்கி அதற்கு உரிய நெத்தியடி பதில்களாக காரணங்களை வரிசைப்படுத்தி, தீர்வுகளை நோக்கிச் சிந்திக்கும் வழிமுறைகளை அளிந்த வகையில் இந்த நூல் வேறொரு தளத்தில் உயர்ந்த இடத்தை அடைகிறது எனலாம்.

“திருமண விடுதலையே” ஒரு புரட்சி தான். அதி லும் “கர்ப்பத்தடை” என்பது மாபெரும் புரட்சியே. இதனை நோக்கி நகரும் காலம் தான் எக்காலமோ? ஆச்சாரங்களும் அனுஸ்டானங்களும் மலிந்து கிடக்கும் வலிந்து திணிக்கும் இந்த காலத்தில் நடைபெறும் சாத்தியம் உள்ளதா என்பதனைச் சாடுகிறார். ஏனோ புனிதப் பெண்ணாய் பிறந்தோம். பத்;தாம் பசலியாய் வளர்ந்தோம். ஏதேதோ படித்தோம். காதல் மணம் புரிந்தோம். முடிந்தால் பணியும் பெற்றோம், பிள்ளைகள் பெற்றுக் கொஞ்சினோம் இறுதி வரை ஆணை அண்டியே வாழ்ந்து மடிந்தோம்! என்பதுதானா பெண்கள் விடுதலை என்ற வாதத்தை முன் வைக்கிறார் பெரியார்.

“பெண்ணியம்” என்று பேசித் திரியும் நமது செயல்கள் யாவும் உண்மையில் பெண்கள் விடுதலைதானா என்று நம் முகத்தில் அடித்து சிந்திக்கத் தூண்டுவதாகவே இந்நூல் அமைந்துள்ளது. ஒவ்வொரு ஆணும் கட்டாயம் வாசிக்க வேண்டிய நூல் மட்டுமன்றி ஒவ்வொரு பெண்ணும் கட்டாயம் பூசிக்க வேண்டிய நூலே இது.

இந்நூலிலுள்ள முத்திரைக் கருத்துக்கள் ஒவ்வொன்றையும் ஒவ்வொரு பெண்ணும் மனத்தால் உள்வாங்கி மூளையில் சலவை செய்து வாழ்வில் நேர்த்தியாக்கி பெரியார் காட்டிய புதுமைப் பெண்ணாக வாழ வேண்டும் என்பதே எனது அவா என்பதை இந்த நூலின் ஊடாக வெளிப்படுத்தியுள்ளார்.

கற்;றே அயர்ச்சியூட்டும் எழுத்துநடை என்ற போதிலும் சமூகத்தை எழுச்சியூட்டும் பாதையில் முன்நகர்த்த உதவும் சிறப்பான நூலே இது.

இந்த வகையில் இந்தப் புத்தகத்தில் கண்ட மேற்படி பத்து அத்தியாயங்களும் பெண்கள் எந்தெந் தக் காரணங்களால் அடிமைப்படுத்தப்பட்டார்கள், அடிமையானார்கள், அடிமைகளாக இருந்து வருகி றார்கள் என்பதை எடுத்துக் காட்டி, எந்தக் காரண காரியங்களால் பெண்கள் அடிமைத் தனத்திலிருந்து விடுபட்டுச் சுதந்திர மக்களாக வாழ முடியும் என்பதை எடுத்துக்காட்டுகள் ஊடக கருத்துக்களை தந்துள்ளார்.

சி.கதீசனா,
ஊடகக் கற்கைகள்,
யாழ் பல்கலைக்கழகம்.



## வீதியல் கிடந்து எடுத்த பணம், நகை: உரியவர்களிடம் வழங்கிய மாணவர்!

(எம்.எம்.ஜெஸ்மின்)

கண்டி மெனிக்ஹின்ன உயர்தர பாடசாலையில் தரம் 9 இல் கல்வி பயிலும் மாணவர்கள் வீதியில் பெண்ணொரு வரால் தவறவிடப்பட்ட பணப் பை மற்றும் நகையைக் கண்டெடுத்து உரிமையாளரிடம் வழங்கியுள்ளனர்.

90 ஆயிரம் ரூபா பெறுமதியான நகை மற்றும் பணம், பணப் பையை வீதியில் இருந்து எடுத்து தனது வகுப்பா சிரியரிடம் ஒப்படைத்து பின்னர் உரிமையாளரிடம் வழங்கி யுள்ளனர்.

13 வயது நிரம்பிய மதுசங்க ருக்ஷான் ,யசித் சமல் ரத்நாயக்க மற்றும் இசுரு சமத்சேனாதிர ஆகியோர் கடந்த திங்கட் கிழமை (22) நடன வகுப்புக்கு சென்று கொண்டிருந்த போது, தரையில் கிடந்த பணப் பையை அதனை எடுத்து பாடசாலை நடன ஆசிரியரிடம் ஒப்படைத்துள்ளனர்.

இதனை அடுத்து அதிபர் ஊடாக உரிமையாளரின் விவரங்களை உறுதிப்படுத்தி பாடசாலைக்கு அழைத்து பணம் மற்றும் நகை அடங்கிய பணப்பையை அவரிடம் ஒப்படைத்தனர்.

மாணவர்களின் செயற்பாட்டுக்குப் பலரும் தமது பாராட்டுக்களைத் தெரிவித்து வருகின்றனர்.

# மன்னார் நீர்ப்பாசன திணைக்களத்தின் ஆய்வு கூட ஊழியர் மீது தாக்குதல்!

(வாஸ் கூஞ்ஞ)

மன்னார் திருக்கேதீஸ்வரத்தில் அமைந்துள்ள மாகாண நீர்ப்பாசன திணைக்களத்தின் மண் பரிசோதனை ஆய்வு கூடத்தில் கடமைமை புரியும் ஊழியர் ஒருவர் தாக்கப்பட்ட நிலையில் மன்னார் பொது வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டுச் சிகிச்சைப் பெற்று வருகிறார்.

இந்தச் சம்பவம் செவ்வாய்க்கிழமை (23) மன்னார் திருக்கேதீஸ்வரத்தில் அமைந்துள்ள மாகாண நீர்பாசன திணைக்களத்தின் மண் பரிசோதனை ஆய்வு கூடப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

மாகாண நீர்பாசன திணைக்களத்தின் பள்ளமடு அலுவலகத்தில் கடமைபுரியும் எந்திரி ஒருவர் மன்னார் திருக் கேதீஸ்வர மண் பரிசோதனை ஆய்வு கூடத்துக்கு வருகை தந்து, அங்கு கடமைபுரியும் ஊழியர் ஒருவரை அலுவலகத்துக்குள் தாக்க முற்பட்டுள்ளார்.

அந்த ஊழியர் தப்புவதற்கு வெளியில் ஓடி வந்ததும் அவரை குறிப்பிட்ட எந்திரி அங்கு கிடந்த தடியால் தாக்கி மண்டையை உடைத்துவிட்டு தான் வந்த வாகனத்தில் சென்றுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்நேரத்தில் அவ்வீதியால் வந்த ஒருவர 1990 அம்புலன்ஸ்க்கு அழைப்பு விடுத்து இவரை மன்னார் பொது வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்துள்ளார்.

ஒரே திணைக்களத்தில் சேவை புரியும் இருவருக்கும் இடையே நீண்ட நாள்களாக கருத்து முரண்பாடுகள் காணப் பட்டு வந்தது என்று இது தொடர்பாக விசாரணைகள் இடம்பெற்று வரும் நிலையிலேயே இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக மன்னார் பொலிஸார் விசாரணையில் ஈடுபட்டுள்ளனர்.

# அக்கரைப்பற்று பிரதேச செயலகத்தில் சீருடை அறிமுகம்



(எம்.ஏ.ஏ.அக்தார்)

அக்கரைப்பற்று பிரதேச செயலகத்தில் கடமையாற்றும் உத்தியோஸ்தர்களும் ஊழியர்களும் அணிந்து கொள்ளும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ள சீருடை அறிமுக நிகழ்வு அண்மையில் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

அம்பாறை மாவட்ட அரச அதிபர் சிந்தக்க அபேவிக்கிரம பிரதம அதிதியாக கலந்து கொண்டு சீருடையை அறிமுகம் செய்து வைத்தார்.

இந்த நிகழ்வில் பிரதேச செயலாளர், உதவி பிரதேச செயலாளர், மாவட்ட திட்ட பணிப்பாளர், பிரதேச செயலக உத்தியோஸ்தர்கள் மற்றும் ஊழியர்கள் கலந்து கொண்டனர்.


# மட்டு. பாலமீன்மடுவில் 17 மில். ரூபா செலவில் அவசர சிகிச்சை, பல் மருத்துவ பிரிவுகள் திறப்பு

(அஸ்ஹர் இப்றாஹிம்)

மட்டக்களப்பு பாலமீன்மடுவில் 17 மில்லியன் ரூபா செலவில் நிர்மா ணிக்கப்பட்ட அவசர சிகிச்சை பிரிவு மற்றும் பல் மருத்துவப் பிரிவு என்பன கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானால் மக்கள் பாவ னைக்காகத் (24) திறந்து வைக்கப் பட்டுள்ளன.



இந்த நிகழ்வில் இராஜாங்க அமைச் சரும், மட்டக்களப்பு மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினருமான வியாழேந்திரன் உள்ளிட்ட அரச அதிகாரிகள் பலர் கலந்துக் கொண்டனர்.


EVEREST
FURNITURE
HIGH QUALITY PRODUCTS
(416) 332-0721
everestfurniture.ca
EverestFurnitureInc
80 FINCHDENE SQ M1X 1C1 SCARBOROUGH, CANADA

# ஜனநாயகத்துக்கு சவாலாகும் தொழில்நுட்பங்கள்!

**இந்த தேர்தலில் ஏ 1 சவாலை ஏற்படுத்துமா?**




**(ஜோசப் நயன்)**

இலங்கையின் அரசியல் சூழல் தற்போது முன்பை விட பல்வேறு எதிர்பார்புக்களையும் அறிவிப்புக்களையும் எதிர்பார்த்த வண்ணம் உள்ளது. நாட்டின் தலைவரான ஜனாதிபதியை தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல் இடம் பெறுமா? இல்லையா? என்ற கேள்விகளும் இல்லாமல் இல்லை.

இலங்கை அரசியல் நிலவரத்தின் படி இந்த வாரத்தில் பல முக்கிய அறிவிப்புக்கள் வெளி வந்துள்ள நிலையில் இன்னும் பல அறிவுப்புக்கள் வருவதற்கான வாய்ப்புக்களும் காணப்படுகின்றன.

இவ்வாறான நிலையில் தொடர்சியாக இடம்பெறவுள்ள தேர்தல்களின் போது மக்களைத் திட்டமிட்ட வகையில் திசை திருப்பவும் உண்மைக்கு புறம்பான விடயங்களை மக்கள் மத்தியில் கொண்டு சேர்பதற்கும் பல்வேறு போலிச் செய்திகள் உருவாக்கப்பட கூடிய வாய்ப்புக்கள், தொழில் நுட்பங்கள் காணப்படுகின்றமையும் அவதானிக்கப்பட்டுள்ளது

குறிப்பாக கடந்த காலங்களில் இடம் பெற்ற ஜனாதிபதி தேர்தலாக இருக்கட்டும் நாடாளுமன்றத் தேர்தலாக இருக்கட்டும் அனைத்திலும் சமூக வலைதலங்கள் ஊடான பிரச்சாரங்கள் முன்னோக்கி காணப்பட்டன.

அதிலும் பல்வேறு உறுதிப்படுத்தப்படாத உண்மைக்குப் புறம்பான செய்திகள் வெளியாகித் தேர்தலில் செல்வாக்கு செலுத்தியிருந்ததுமை நாம் அனைவரும் அறிந்ததே.

தற்போது இலங்கை மாத்திரம் இல்லாமல் உலக நாடுகள் முழுவதிலும் ஏ 1 தொழில் நுட்பம் தொடர்பில் அச்ச நிலைமை தோன்றியிருக்கின்றது. குறிப்பாக ஏ 1 தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி தேர்தல் தொடர்பில் பல்வேறு போலி செய்திகள், போலி குரல் பதிவுகள், போலி காணொளிகள் என்பவற்றை தயாரித்து மக்களின் தேர்தல் தொடர்பிலான நிலைப்பாட்டில் மாற்றங்களை ஏற்படுத்த கூடிய வகையில் தொழில் நுட்பங்களைப் பயன்படுத்த கூடிய நிலைமை காணப் படுகின்றது.

அண்மைக் காலமாக வேட்பாளர்களின் குரல்களுக்கு ஒத்த குரல் பதிவுகள் சமூக வலைதளங்கள் ஊடாகப் பரப்பப்பட்டு அவை ஏ 1 தொழில்நுட்பம் ஊடாக தயாரிக்கப்பட்டவை என கண்றியப்பட்டுள்ளது.

மறுபுறம் ஏ 1 தொழில்நுட்பத்தின் ஊடாக எடிட் செய்யப்பட்ட புகைப் படங்கள், கணொளிகளும் வெளியாகி அவை உண்மைக்குப் புறம்பானவை என்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அதே நேரம் தேர்தல் கருத்து கணிப்புக்கள் என்ற பெயரில் சர்வதேச நிறுவனம் ஒன்றை போலியாக அடையாளப்படுத்தி சில தனிப்பட்ட வேட்பாளர்களுக்கு சாதகமான கருத்து கணிப்புக்கள் வெளியிடப்பட்டு வருகின்றன.

இவ்வாறான நிலையில் இலங்கையில் இடம்பெறவுள்ள தேர்தல் தொடர்பிலும் தேர்தலுக்கான அறிவிப்புக்கள் உள்ளடங்களாக தேர்தல் காலப் பகுதியில் பல்வேறு போலியான, உறுதிப்படுத்தப்படாத செய்திகள் வெளிவரக் கூடிய வாய்ப்புக்கள் முன்பை விட அதிகமாக காணப்படுகின்றன.

இருப்பினும் இவ்வாறான செய்திகளின் உண்மைத் தன்மையை அறிவதற்கான வாய்ப்புகளைப் பயன்படுத்துவது தொடர்பிலான தெளிவு மக்களிடம் பெறும்பாலும் குறைவாகவே உள்ளது.

சமூக ஊடகங்கள் மாத்திரம் இல்லாது பிரதான ஊடகங்கள் கூட இவ்வாறான தேர்தல் காலங்களில் சில கட்சிக்கு சார்பானதும் சில கட்சிகளை பாதிக்க கூடிய வகையிலும் கருத்துக்களையும் போலியான செய்திகளையும் வெளியிட்டுள்ளது.

எனவே தேர்தல் காலங்களில் வெளியிடப்படும் செய்திகள் தொடர்பிலும் கருத்துக்கள் தொடர்பிலும் மக்கள் மிகவும் அவதானமாக செயற்பட வேண்டிய சூழல் காணப்படுவதுடன் தேர்தல் காலங்களில் நம்பகத்தன்மையான உறுதிப்படுத்தப்பட்ட செய்திகளை வெளியிடுவது தொடர்பில் ஊடகங்களும் அவதானமாக செயற்பட வேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.



# விளையாட்டு பாட ஆசிரியர் கௌரவிப்பு

**(எம்.எம்.ஜெஸ்மின்)**

கடந்த காலங்களில் கல்முனை அல் பஹ்ரியா மகா வித்தியாலய மாணவர்கள் விளையாட்டுத்துறையில் பல சாதனைகளை புரிந்து வந்துள்ளனர்.

கோட்ட மட்டம், வலய மட்டம், மாகாண மட்டம் மற்றும் தேசிய ரீதியில் பல சாதனைகளைப் புரிவதற்கு இந்தப் பாடசாலை மாணவர்களை சிறந்த முறையில் ஊக்கமளித்து பயிற்சிகளை வழங்கிய விளையாட்டு பாட ஆசிரியரான எல்.ஸிபான், மற்றும் விளையாட்டு பயிற்றுவிப்பாளர்களான எம்.ஏ.எம்.றியாழ், ஏ.டபிள்யூ.எம்.ஆஸாத் கான் ஆகியோரைக் கௌரவிக்கும் நிகழ்வு பழைய மாணவர் சங்கத்தால் பாடசாலை அதிபர் எம்.ஏ.சலாம் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர் சங்க உறுப்பினர்கள் மற்றும் பழைய மாணவர் சங்க செயலாளர் யூ.எல்.எம்.ஹாஜா உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# புலிகள் அமைப்பின் மீதான தடை நீடிப்பை ஆட்சேபித்து தீர்ப்பாயத்தில் வைகோ மனு

**(திருச்சி எம். கே. ஷாகுல் ஹமீது)**



தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பைத் தடை செய்தமைக்கு எதிராக சட்ட விரோத நடவடிக்கைகள் தடுப்புச் சட்ட தீர்ப்பாயத்தின் முன்னால் மனுச் செய்து தமது சட்டத்தரணி மூலம் முன்னிலையாகியிருக்கின்றார் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச்செயலாளர் வைகோ.

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பை, சட்ட விரோத நடவடிக்கைகள் தடுப்புச் சட்டத்தின் படி, சட்ட விரோத அமைப்பாக அறிவித்து, ஏற்கனவே விதிக்கப்பட்டுள்ள தடையை 14.05.2024 அன்று, மேலும் ஐந்து ஆண்டுகளுக்கு நீடித்து மத்திய அரசின் உள்துறை அமைச்சகம் அரசாணை வெளியிட்டது.

அந்தத் தடை அறிவிப்பின்படி, முகாந்திரங்களை ஆராய்ந்து முடிவு செய்ய, சட்டவிரோத நடவடிக்கைகள் (தடுப்பு) சட்டப்படி, டெல்லி உயர்நீதி மன்ற நீதியரசர் மன்மீத் பிரிட்டம் சிங் அரோரா தலைமையில் சட்ட விரோத நடவடிக்கைகள் தடுப்புச் சட்ட தீர்ப்பாயத்தை அமைத்து 05.06.2024 அன்று மத்திய அரசு மீண்டும் அடுத்த அரசாணை வெளிட்டது.

அத்தீர்ப்பாயம், சட்ட விரோத நடவடிக்கைகள் தடுப்புச் சட்டப்படி, விடுதலைப் புலிகள் அமைப்பை தடை செய்யப்பட்ட அமைப்பாக ஏன் அறிவிக்க கூடாது என்பதற்கு ஏதும் காரணம் இருப்பின் விடுதலைப் புலிகள் அமைப்பைச் சேர்ந்தவர்கள் நேரிலோ அல்லது வழக்கறிஞர் மூலமாகவோ 23.07.2024 மாலை 4 மணிக்கு இத்தீர்ப்பாயத்தில் விளக்கம் அளிக்க வேண்டும் என தெரிவித்திருந்தது.

அதன் அடிப்படையில், மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச் செயலாளர் வைகோ சார்பில், இந்தத் தீர்ப்பாயத்தில் மனுச் செய்யப்பட்டது. விடுதலைப்புலிகள் அமைப்புக்கு, இந்திய ஒன்றியத்தில், தடை விதிக்க முகாந்திரம் இல்லை, ஆகவே, அந்த அமைப்புக்கு விதிக்கப்பட்டிருக்கும் தடையை, இந்திய ஒன்றிய அரசு இரத்து செய்ய வேண்டுமென்றும், வழக்கில் தன்னை ஒரு தரப்பினராக சேர்த்துக் கொள்ள வேண்டும் என்றும, 23.07.2024 மாலை புதுடில்லியில் தீர்பாயத்தில் மனுத்தாக்கல் செய்யப்பட்டது.

கழகப் பொதுச்செயலாளர் வைகோ தாக்கல் செய்த மனுவை தீர்ப்பாயம் ஏற்றுக் கொண்டது. ஓகஸ்டு 7 ஆம் திகதிக்கு விசாரணை ஓத்தி வைக்கப்பட்டது. கடந்த ஒவ்வொரு ஐந்தாண்டுகளிலும் இதே போன்ற மனுவை வைகோ நீதிமன்றத் தீர்ப்பாயத்தில் தாக்கல் செய்து இருந்தார்.



# உத்தரபிரதேசத்தில் இரு சம்பவங்களில் 5 சிறுமிகள் நீரில் மூழ்கி உயிரிழந்தனர்!

**லக்னோ, ஜூலை 25**

உத்தரபிரதேச மாநிலம் கபீர்நகர் மாவட்டத்தில் உள்ளது பார்கோ கிராமம். ஊரை ஒட்டி பாகிரா ஏரி உள்ளது. ஏரியில் படகில் சென்று சிலர் மீன் பிடிப்பது உண்டு. நேற்று ஒரு படகில் சிறுமிகள் மீனாட்சி (வயது 17), காஜல்(16), அர்ச்சனா (15), பாயல் (13) உள்ளிட்டவர்கள் சென்றுள்ளனர். எதிர்பாராதவிதமாக படகு கவிழ்ந்ததில் இவர்கள் 4 பேரும் ஏரியில் மூழ்கினர். அவர்களில் காஜல் தவிர மற்ற 3 பேரும் பிணமாக மீட்கப்பட்டனர். காஜல் மீட்கப்பட்டு ஆஸ்பத்திரியில் சிகிச்சையில் உள்ளார்.

இதேபோல இந்த மாவட்டத்தின் துத்ரா போலீஸ் நிலைய எல்லை பகுதியில் மற்றொரு சம்பவம் நடந்தது. கத்தியவா கிராமத்தை சேர்ந்த சகோதரிகளான பிரமிளா(18), ஊர்மிளா(15) இருவரும் ஊரை ஒட்டி உள்ள தோட்டத்திற்கு சென்றனர். அப்போது அருகில் உள்ள குட்டையில் ஊர்மிளா தவறி விழுந்தார். அவரை காப்பாற்ற பிரமிளாவும் குட்டையில் குதித்து உள்ளார். இதில் இருவரும் நீரில் மூழ்கி பலியானார்கள்.

மீட்பு படையினர் அவர்களது உடல்களை கைப்பற்றி குடும்பத்தினரிடம் ஒப்படைத்தனர். இந்த சம்பவங்கள் குறித்து அந்த பகுதி போலீசார் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகிறார்கள்.



# அத்தியாவசியப் பொருள்களுக்காக வரிசையில் நின்று படையினரிடம் உடலை விற்கின்ற சூடான் பெண்கள்!

உள்நாட்டுப் போரினால் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ள ஆப்பிரிக்க நாடான சூடானில் தினமும் பெண்கள் இராணுவ வீரர்களால் பாலியல் பலாத்காரம் செய்யப்பட வரிசையில் நிற்கின்றனர். அவ்வாறு செய்தால் மட்டுமே தங்களது குடும்பத்துக்கு தேவையான உணவும் அத்தியாவசிய பொருள்களும் அவர்களுக்கு கிடைக்கிறது .

இதுகுறித்து கார்டியன் இதழ் வெளியிட்டுள்ள செய்தியில், பஞ்சத்தை சமாளிக்க நாடு முழுவதும் உள்ள தொழிற்சாலைகளில் இறைச்சி உள்ளிட்ட உணவுப் பொருள்கள் பதப்படுத்தப்பட்டு இருப்பு வைக்கபட்டுள்ள நிலையில் அங்கு தங்களின் குடும்பத்துக்கு தேவையான உணவை பெற்றுக் கொள்ள வரும் பெண்கள் இராணுவ வீரர்காளால் இந்த வன்கொடுமைகளுக்கு ஆளாக்கி வருகின்றனர்.

சூடான் ராணுவத்தின் இருவேறு பிரிவுகளான SAF மற்றும் RSF ஆகிய படைகளுக்கிடையே கடந்த வருடம் ஏப்ரல் மாதத்தில் ஏற்பட்ட மோதல் உள்நாட்டுப் போராக வெடித்தது. இந்த போரில் இதுவரை சுமார் 150,000 மக்கள் இறந்துள்ளனர். போரில் ஏற்பட்ட பஞ்சத்தால் 11 மில்லியன் மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர்.

RSF ராணுவ வீரர்கள் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் உள்ள பெண்கள் தொடர்ந்து பாலியல் துன்புறுத்தலுக்கு ஆளாகிவருகின்றனர் அப்பெண்கள் பலர் கார்டியன் இதழ் கள செய்தியாளர் குழுவிடம் வாக்குமூலம் அளித்துள்ளனர்.

தங்களின் குழந்தைகளுக்கு உணவளிப்பதற்கு வேறு வழி தங்களுக்கு தெரியவில்லை என்று அவர்கள் கூறுகின்றனர். போரினால் கைவிடப்பட்ட வீடுகளில் முகாமிட்டுள்ள இராணுவ வீரர்கள் பெண்களை வரிசையில் நிறுத்தி பாலியல் வன்புணர்வு செய்கின்றனர்.

பாதிக்கப்பட்ட பெண் ஒருவர் கூறுகையில், தான் அதற்கு மறுத்ததால் தன்னை ராணுவ வீரர்கள் சித்திர வதை செய்து தனது கால்களை எரித்ததாக கூறுகிறார். கைவிடப்பட்ட வீடுகளில் உள்ள பொருடள்களை எடுத்துச் சென்று விற்று அதன்மூலம் உணவு வாங்க வேண்டும் என்றால் ராணுவ வீரர்களின் நிர்பந்தத்துக்கு அடிபணித்த பிறகே அனுமதி கிடைக்கும் என்ற நிலை உள்ளது.



# உலகின் சக்திவாய்ந்த பாஸ்போர்ட்கள் பட்டியலில் சிங்கப்பூருக்கு முதலிடம்!

**லண்டன்,ஜுலை25**

உலகின் சக்திவாய்ந்த பாஸ்போர்ட் பட்டியலில் சிங்கப்பூர் முதலிடத்தைப் பிடித்துள்ளது.

உலகின் சக்திவாய்ந்த பாஸ்போர்ட் பட்டியலை ‘ஹென்லி பாஸ்போர்ட் இண்டெக்ஸ்’ என்ற அமைப்பு வெளியிட்டுள்ளது. இந்த பட்டியலில் இடம்பெற்றுள்ள நாடுகள் சர்வதேச விமான போக்குவரத்து சங்கத்தின் (IATA) தரவுகளின் அடிப்படையில் தரவரிசைப்படுத்தப்பட்டுள்ளது.

இதன்படி உலகின் சக்திவாய்ந்த பாஸ்போர்ட் பட்டியலில் சிங்கப்பூர் முதலிடத்தைப் பிடித்துள்ளது. சிங்கப்பூர் பாஸ்போர்ட் மூலம் 195 நாடுகளுக்கு விசா இல்லாமல் பயணிக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த பட்டியலின் 2 ஆவது இடத்தில் பிரான்ஸ், இத்தாலி, ஜெர்மனி, ஸ்பெயின் மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகள் இடம்பெற்றுள்ளன. இந்த நாடுகளின் பாஸ்போர்ட் மூலம் 192 நாடுகளுக்கு விசா இன்றி பயணிக்கலாம்.

தொடர்ந்து 3ஆவது இடத்தில் ஆஸ்திரியா, பின்லாந்து, அயர்லாந்து, லக்சம்பெர்க், நெதர்லாந்து, தென் கொரியா மற்றும் சுவீடன் ஆகிய நாடுகள் உள்ளன. இந்த நாடுகளின் பாஸ்போர்ட் மூலம் 191 நாடுகளுக்கு விசா இல்லாமல் பயணிக்க முடியும்.

இதையடுத்து 4 ஆவது இடத்தில் பிரிட்டன், நியூசிலாந்து, நோர்வே, பெல்ஜியம், டென்மார்க் மற்றும் சுவிட்சர்லாந்து ஆகிய நாடுகளும், 5 ஆவது இடத்தில் ஆஸ்திரேலியா மற்றும் போர்ச்சுகல் ஆகிய நாடுகளும் உள்ளன. இந்த பட்டியலில் அமெரிக்கா 8 ஆவது இடத்தில் உள்ளது. அமெரிக்காவின் பாஸ்போர்ட் மூலம் 186 நாடுகளுக்கு விசா இல்லாமல் பயணிக்க முடியும் என கூறப்பட்டுள்ளது.

இந்த பாஸ்போர்ட் தரவரிசை பட்டியலில் இந்தியா 82ஆவது இடத்தில் உள்ளது. இந்தியாவின் பாஸ்போர்ட் மூலம் இந்தோனேசியா, மலேசியா, தாய்லாந்து உள்ளிட்ட 58 நாடுகளுக்கு விசா இல்லாமல் பயணிக்க முடியும். இந்தியாவின் அண்டை நாடான பாகிஸ்தான், இந்த பட்டியலின் 100 ஆவது இடத்தில் உள்ளது குறிப்பிடத்தக்கது.

பக்கங்கள் - 6

கனடா முரசு

வியாழக்கிழமை 26/07/2024

## டாராண்டோவில் மழையால் போக்குவரத்துகளில் பாதிப்பு

**ஒன்ராரியோ, ஜூலை 25**

டொராண்டோவில் நேற்றுப் பிற்பகல் இடியுடன் கூடிய மழை பெய்தது.

இதன் காரணமாக டொன் வெலி பார்க்வே, லேக் ஷோர்

C2 ▶



# நேற்று அதிகாலை ஸ்காபரோவில் துப்பாக்கிச் சூட்டுக்கு இருவர் பலி

## மற்றிருவர் படுகாயமடைந்தனர்

ஒன்ராரியோ, ஜூலை 25

நேற்று அதிகாலை ஸ்காபரோவில் உள்ள ஒரு பிளாசாவிற்கு வெளியே இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தில் இரண்டு பேர் உயிரிழந்ததுடன், இருவர் படுகாயமடைந்தனர்.

மிட்லாண்ட் அவென்யூவிற்கு அருகிலுள்ள எல்லெஸ்மியர் சாலை மற்றும் ஒக்லி பவுல்வார்டு பகுதியில் உள்ள ஒரு பிளாசாவின் வாகன நிறுத்துமிடத்தில் அதிகாலை2:30மணிக்குப்பிறகுஇந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சம்பவ இடத்திலேயே ஆண் ஒருவர் உயிரிழந்துள்ளார் எனவும், ஒரு பெண் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இரண்டு ஆண்கள் பலத்த காயங்களுடன் வைத்தியசாலையில் சிகிச்சைப் பெற்று வருகின்றனர்.

பலியானவர்களின் வயது குறித்த தகவல்களை பொலிஸார் தெரிவிக்கவில்லை.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# அறக்கட்டளை மூலமான அரச உதவி நிதியை சொந்த நிறுவனங்களுக்கு திருப்பி விட்டவர்!

**ஒன்ராரியோ, ஜூலை 25**

பசுமைத் தொழிநுட்பத் திட்டங்களுக்காக நூற்றுக்கணக்கான மில்லியன் டொலர்களை மத்திய அரசின் நிதியில் செலவிடுவதற்குப் பொறுப்பான ஓர் அறக்கட்டளையின் முன்னாள் தலைவர், தமது சொந்த நிறுவனங்களுக்கு அதனைப் பயன்படுத்தியுள்ளார் என நெறிமுறை ஆணையாளர் நேற்றுத் தெரிவித்துள்ளார்.

கிரீன் ஃபண்ட் பொதுப் பணத்தைக் கையாள்வதில் குறைபாடுகள் இருப்பதாகக் கூறிய ஒரு கணக்காய்வாளர் நாயக அறிக்கையின் பிரதிபலிப்பாக கடந்த மாதம் 'சஸ்டெய்னபல் டெவலப்மன்ட் டெக்னோலஜி கனடா' இரத்து செய்யப்பட்டது.

இந்த அமைப்பு 2001 இல் தொடங்கப்பட்டதிலிருந்து

C2 ▶






# சாலைக் கட்டுமானத் தள மின்னணு செய்திப் பலகைகளில் பலஸ்தீனிய அரசியல் வாசகங்கள் ஒளிர்ந்தமை எங்ஙனம்?

**கியூபெக், ஜூலை 25**

மொன்றியலில் இரண்டு சாலைக் கட்டுமான தளங்களில் உள்ள மின்னணு செய்தி பலகைகளில் நேற்று காலை வழக்கமான போக்குவரத்து எச்சரிக்கைகளுக்கு பதிலாக பலஸ்தீனிய சார்பு அரசியல் வாசகங்கள் காட்டப்பட்டமை தொடர்பில் மொன்றியல் பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

பொதுவாக வாகன ஓட்டிகளுக்கு சாலைப் பணியை அறிவுறுத்தும் செய்தி பலகைகளில் 'சுதந்திர பலஸ்தீனம்', 'இப்போது அதிகரிக்கவும்' மற்றும் 'இன்டிஃபாடாவை உலகமயமாக்கல்' போன்ற சொற்றொடர்களைக் காண்பிக்கும் வகையில் சேதப்படுத்தப் பட்டிருந்தன.

அரபு மொழியில் 'நடுங்கும்' என்று பொருள்படும் இன்டிஃபாடா, 1987 இல் வெடித்த இஸ்ரேலின் இராணுவ ஆக்கிரமிப்பிற்கு எதிரான ஒரு எழுச்சியை விவரிக்க பயன்படும் சொல்லாகும்.

2000 ஆம் ஆண்டில் தொடங்கிய இரண்டாவது கிளர்ச்சியில், பலஸ்தீனிய போராளிகள் பஸ்கள் மற்றும் உணவகங்கள் மற்றும் ஹோட்டல்களில் தற்கொலை குண்டுத் தாக்குதல்களை நடத்தி, நசுக்கிய இஸ்ரேலிய இராணுவப் பழிவாங்கலை வெளிப்படுத்தினர்.

போக்குவரத்து அடையாளங்களில் உள்ள செய்திகள் யூதர்களுக்கு எதிரான வன்முறையைத் தூண்டுவதாகும் எனவும், 'இன்டிபாடா' என்பது பயங்கரவாதத் தாக்குதல்களைக் குறிப்பதாகவும், இஸ்ரேல் மற்றும் யூத விவகாரங்களுக்கான மையத்தின் கியூபெக் துணைத் தலைவர் எட்டா யுடின் தெரிவித்துள்ளார்.

---

## பாராண்டோவில்...

**(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)**

பொலிவார்ட் மற்றும் சில டவுன்டவுன் சுரங்கப்பாதை நிலையங்களில் திடீர் வெள்ளம் ஏற்பட்டது.

பிற்பகல் 2 மணியளவில் திடீரென பெய்த அடைமழை காரணமாக டொன் வெலி பார்க்வே மற்றும் லேக் ஷோர் பொலிவார்டின் சில பகுதிகள் முழுவதுமாக நீருக்குள் மூழ்கின என டொராண்டோ பொலிஸார் தெரிவித்தனர்.

இதன் விளைவாக இரண்டு முக்கிய சாலைகளில் உள்ள பல பாதைகள் சில மணிநேரங்களுக்கு மூடப்பட்டிருந்தன. வெள்ளம் வடிந்ததையடுத்து அவை மீண்டும் திறக்கப்பட்டன.

## அறக்கட்டளை மூலமாக...

**(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)**

2.1 பில்லியன் டொலர்கள் மத்திய அரசின் நிதியைப் பெற்றது.

2021 இல் கையெழுத்திடப்பட்ட மத்திய அரசாங்கத்துடனான புதிய ஒப்பந்தம், 2028 வரை 722.5 மில்லியன் டொலர்கள் நிதியைக் கோடிட்டுக் காட்டியது.

2019 இல் சஸ்டெய்னபல் டெவலப்மன்ட் டெக்னோலஜி கனடாவின் தலைவராக என்னெட் வெர்ஸ்சுரன் நியமிக்கப்பட்டார்.

எனினும், அவரால் உருவாக்கப்பட்ட என்.ஆர்ஸ்டோர் நிறுவனத்தின் தலைவராகவும், பிரதம நிறைவேற்று அதிகாரியாகவும், பெரும்பான்மை பங்குகளின் உடமையாளராகவும் அவர் தொடர்ந்தார்.

கொவிட்-19 தொற்றுநோய்களின் போது, தனது சொந்தம் உட்பட நிதியுதவிக்காக முன்னர் அங்கீகரிக்கப்பட்ட அனைத்து நிறுவனங்களுக்கும் அவசரகால நிவாரணத் தொகைகளை வழங்க அவர் உறுதியளித்துள்ளார் என நெறிமுறைகள் ஆணையாளர் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.



# பிரிட்டிஷ் கொலம்பியாவில் தெளிந்த காலநிலை மாற்றம்

## விரைந்து வருவதாக நற்செய்தி

**பிரிட்டிஷ் கொலம்பியா, ஜூலை 25**

பிரிட்டிஷ் கொலம்பியாவில் தெளிவான காலநிலை மாற்றம் முன்னறிவிக்கப்பட்டதை விட வேகமாக வருகிறது என்று வனத்துறை அமைச்சர் புரூஸ் ரோல்ஸ்டன் தெரிவித்துள்ளார்.

பிரிட்டிஷ் கொலம்பியாவில் புயல்கள், காற்று, மின்னல் மற்றும் வறட்சியை எதிர்கொண்டுள்ளதால், நூற்றுக்கணக்கான காட்டுத்தீயுடன் குழுக்கள் போராடி வரும் நிலையிலேயே அமைச்சரின் இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

சமீபத்திய கோடை புயல்களால் ஆயிரக்கணக்கான மின்னல் தாக்குதல்கள் காட்டுத்தீயின் எண்ணிக்கையை அதிகரிக்க வழிவகுத்தன.

இருப்பினும் மாகாணத்தின் வடக்கு பகுதியில் மழை மற்றும் குளிர்ந்த வெப்பநிலையால் சில மீட்சி அல்லது நிவாரணங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன என அமைச்சர் கூறியுள்ளார்.

பிரிட்டிஷ் கொலம்பியாவின் காட்டுத்தீ சேவையினால் நேற்று வெளியிடப்பட்ட அறிக்கையில், வெப்பமான மற்றும் வறண்ட நிலைகள் நீடிக்கும் தென்கிழக்கு தவிர, மாகாணத்தின் பெரும்பகுதி அதிக பருவகால வெப்ப நிலைக்கு திரும்புவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இன்றைய தினம் 'ஒரு மாதத்திற்கும் மேலாக குளிர்ச்சியான வெப்ப நிலையை' கொண்டு வரும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாகாணத்தில் 430 க்கும் மேற்பட். இடங்களில் தீ எரிகிறது. அவற்றில் 80 சதவிகிதம் கடந்த சில வாரங்களில் மாகாணம் முழுவதும் தாக்கிய தொடர்ச்சியான மின்னல் புயல்களால் தொடங்கியவையாகும்.

# மக்கள் மருந்தகச் சிகிச்சைப் பட்டியலில் மேலும் 14 நோய்களைச் சேர்க்க ஆராய்வு

**ஒன்ராரியோ, ஜூலை 25**

ஒன்டாரியோ மக்கள் மருந்தகத்தில் சிகிச்சை பெறக்கூடிய உடல்நலப் பிரச்சினைகளின் பட்டியலில் மேலும் 14 பொதுவான நோய்களைச் சேர்ப்பது குறித்த ஆலோசனைகளைத் தொடங்குவதாக ஒன்ராரியோ அரசாங்கம் தெரிவித்துள்ளது.




ஒன்ராரியோ மருந்தாளுனர்கள் சங்கம் மற்றும் கனடாவின் அண்டை நாடான மருந்தகங்கள் சங்கம் போன்ற கூட்டாளர்களுடன், மருந்தாளுனர்களின் திறன்கள் மற்றும் நிபுணத்துவத்தை மேம்படுத்துவதற்கான வழிகள் குறித்து ஆலோசனைகளைத் தொடங்கியுளளதாக சுகாதார அமைச்சர் சில்வியா ஜோன்ஸ் கூறியுள்ளார்.

தொண்டை புண், தலை பேன் மற்றும் தூக்கமின்மை போன்ற சிறிய தூக்கக் கோளாறுகள் போன்ற நோய்களுக்கு மருந்தகங்களில் சிகிச்சை மற்றும் பரிந்துரைப்பது, அத்துடன் சோதனைகளை பரிந்துரை செய்தல் மற்றும் சேகரித்தல் மற்றும் ஸ்ட்ரெப் தொண்டை போன்ற நோய்களுக்கு இந்த ஆலோசனைகள் பார்க்கப்படும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.




# புற்றுநோய் ஆய்வுக்கு நிதி திரட்ட உதவிய சைக்கிள் வீடுடைத்துத் திருடப்பட்டுள்ளது

கனடாவில் புற்றுநோய் ஆய்வுகளுக்காக நிதி திரட்டும் நோக்கில் பயணங்களை மேற்கொண்ட சைக்கிள் ஒன்று கடந்த வார இறுதியில் டொரன்டோவின் இட்டோபிகாக் பகுதியில் அமைந்துள்ள வீடு ஒன்றிலிருந்து களவாடப்பட்டுள்ளது.

வீட்டின் கதவு உடைக்கப்பட்டு சைக்கிள் மற்றும் சில பெறுமதியான பொருள்கள் களவாடப்பட்டன வீட்டின் உரிமையாளர் மொனிக்கா டியோடான்ஸ் தெரிவிக்கின்றார்.

மூன்று ஆண்டுகளுக்கு முன்னதாக இந்த சைக்கிளைத் தான் கொள்வனவு செய்தார் என அவர் தெரிவிக்கின்றார்.

இந்த சைக்கிள் பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்டது எனவும் இதனை வடிவமைப்பதற்கு சுமார் 10,000 டொலர்கலைத் தாம் செலவிட்டார் எனவும் மொனிக்கா தெரிவிக்கின்றார்.

வீட்டுக் காப்புறுதி ஊடாக இந்த சைக்கிளை மீள பெற்றுக்கொள்ள முடியுமா என்பது தெரியவில்லை என அவர் குறிப்பிடுகின்றார்.

1986 ஆம் ஆண்டு முதல் தாம் புற்றுநோய் ஆய்வாளராகக் கடமை ஆற்றி வருகிறார் என அவர் தெரிவிக்கின்றார்.

புற்றுநோயை ஆய்வு நடவடிக்கைகளுக்காக 90 ஆயிரம் டொலர்களை நன்கொடையாகத் தான் திரட்டியுள்ளார் எனத் தெரிவிக்கின்றார்.

இதேவேளை, டொரன்டோவில் கடந்த ஆண்டு சுமார் 3000 சைக்கிள்கள் களவாடப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.




# நியூ பிரவுன் ஸ்வீட் பிராந்தியத்தில் வீடொன்றில் இரு சடலங்கள் மீட்பு

கனடாவில் நியூ பிரவுன் ஸ்வீட் பிராந்தியத்தின் ரொத்சேய் பகுதியில் வீடு ஒன்றிலிருந்து இரண்டு சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன.

ஆண் ஒருவரினதும் பெண் ஒருவரினதும் சடலங்கள் இவ்வாறு மீட்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த இருவரினதும் மரணத்திற்கான காரணங்கள் எதுவும் இதுவரை கண்டறியப்படவில்லை.

சம்பவம் தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இந்த சம்பவம் காரணமாக பொது மக்களுக்கு எவ்வித பாதிப்பும் கிடையாது எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. பிரேதப் பரிசோதனை நிறைவடையும் வரையில் இந்த சம்பவம் தொடர்பில் எவ்வித கருத்துகளையும் வெளியிட முடியாது என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# வட்டி வீதங்களை குறைக்குமாறு ஒன்றாரியோ முதல்வர் கோரிக்கை



வங்கி வட்டி வீதங்களை மேலும் குறைக்க வேண்டும் என ஒன்றாரியோ முதல்வர் போர்ட் மீண்டும் சமூக ஊடகங்கள் மூலமாக கோரிக்கை முன் வைத்துள்ளார்.

மத்திய வங்கி வட்டி வீதம் தொடர்பில் இன்றைய தினம் கூடித் தீர்மானிக்க உள்ளது.

நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்த வேண்டுமாயின் வட்டி வீதம் குறைக்கப்பட வேண்டும் என ஒன்றாரியோ முதல்வர் வலியுறுத்தியுள்ளார்.

ஒன்றாரியோ மற்றும் கனடா முழுவதும் உள்ள மக்கள் உதவியை நாடியிருக்கின்றனர் என அவர் தெரிவித்துள்ளார்.

வட்டி வீதம் இன்றைய தினம் 25 அடிப்படை புள்ளிகளில் குறைக்கப்படும் என பொதுவாக எதிர்பார்க்கப்படுகின்றது.

கனடிய மத்திய வங்கி 10 வெவ்வேறு சந்தர்ப்பங்களில் வட்டி வீதத்தை அதிகரித்துள்ளது.

ஒன்றாரியோ மாகாணத்தில் புதிய வீடுகளை நிர்மாணிப்பதற்கு மத்திய வங்கி வட்டி விகிதங்களை குறைக்க வேண்டும் என முதல்வர் போர்ட் கூறியுள்ளார்.

இதேவேளை, கடந்த ஜூன்மாதம் நாட்டின் பண வீக்கம் 2.7 விதமாக பதிவாகி இருந்தமை குறிப்பிடத்தக்கது.




# இந்து ஆலயத்தில் நாசகார வேலை விஷ்வ ஹிந்து பரிஷத் கண்டனம்!




கனடாவின் எட்மன்டன் நகரில் அமைந்துள்ள இந்து ஆலய வளாகத்தின் அறிவிப்பு பலகை சேதப்படுத்தப்பட்டுள்ளது என்று தெரிவித்து, அதில் இந்தியாவிற்கு எதிரான வாசகங்கள் எழுதப்பட்டிருப்பதற்கு விஸ்வ ஹிந்து பரிஷத் கனடா பிரிவு கடும் கண்டனம் வெளியிட்டுள்ளது.

இது தொடர்பாக விஸ்வ ஹிந்து பரிஷத்தின் கனடா பிரிவு தனது டிவிட்டர் தளத்தில் கூறியிருப்பவை வருமாறு :-

“எட்மன்டன் நகரில் உள்ள பி.ஏ.பி.எஸ். (BAPS) சுவாமிநாராயணன் கோயிலில் இந்த செயல் நடைபெற்றுள்ளது. இதில் முரணான வாசகங்கள் சிலவும் கோயிலின் சுவற்றில் எழுதப்பட்டுள்ளன.

“இந்த நாச வேலையை விஸ்வ ஹிந்துப் பரிஷத் – கனடா கடுமையாக கண்டிக்கிறது. நாட்டில் அமைதியை விரும்பும் இந்து சமூகத்துக்கு எதிராக வெறுப்பைத் தூண்டும் வகையிலான இந்தப் பிரிவினைவாத செயலுக்கு எதிராக தேவையான நடவடிக்கையை எடுக்குமாறு அரசை கேட்டுக்கொள்கிறோம்” என அதில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இதனிடையே கனடாவில் உள்ள இந்து ஆலயங்கள் மீது காலிஸ்தான் பிரிவினைவாதிகள் தாக்குதல் நடத்துவது தொடர்ந்து நடைபெற்று வருகிறது. அதன் தொடர்ச்சியாகத்தான் எட்மன்டன் சுவாமி நாராயண் ஆலய வளாகத்தில் ஆட்சேபகரமான வாசகங்களை எழுதி சேதப்படுத்திய அவர்களது தாக்குதல் இருக்கலாம் என்ற ஐயம் எழுந்திருக்கிறது.

இங்குள்ள சீக்கியர்களில் ஒரு பிரிவினர் இந்தியாவிற்கு எதிராகவும், இந்து மதத்திற்கு எதிராகவும் செயல்பட்டு வருகிறார்கள் என்றும் குறிப்பிட்டுள்ளது.

# கனடிய நீதிமன்ற தீர்ப்பு குறித்து அதிருப்தியை வெளியிடும் பெண்

கனடாவின் கியூபிக் மாகாண நீதிமன்ற தீர்ப்பு குறித்து பெண் ஒருவர் அதிருப்தி வெளியிட்டுள்ளார்.

25 வயதான தமது மகளை வாகனத்தில் மோதி கொன்ற நபருக்கு விதிக்கப்பட்ட தண்டனை குறித்தே அவர் இவ்வாறு அதிருப்தி வெளியிட்டுள்ளார்.

கடந்த 2022 ஆம் ஆண்டு நபர் ஒருவர் அவரது மகளை வாகனத்தினால் மோதி விட்டுத் தப்பிச் சென்றார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அந்த நபருக்கு விதிக்கப்பட்ட தண்டனையில் ஆறில் ஒரு பகுதியை மட்டும் அவர் சிறையில் கழித்து உள்ளார் என அந்தப் பெண் தெரிவிக்கின்றார்.

தமது மகளை கொன்றவர் முன் கூட்டியே சிறையிலிருந்து விடுதலை



செய்யப்பட்டமையை கேள்வியுற்றதும் மிகுந்த அதிர்ச்சியும் வேதனையையும், மன அழுத்தத்தையும் தாம எதிர் நோக்கினார் என ஏலியன் டெல் என்ற அந்தப் பெண் தெரிவிக்கின்றார்.

கடந்த 2022 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 24 ஆம் திகதி இந்த வாகன விபத்து சம்பவம் இடம்பெற்றது.

தனது மகளுடன் மிக நெருங்கிய பிணைப்பைத் தாம் கொண்டிருந்தார் எனவும் அவரது இழப்பு தமது வாழ்வையே மாற்றி விட்டது எனவும் அந்தப் பெண் தெரிவிக்கின்றார்.

இதேவேளை, குற்றம் சுமத்தப்பட்ட நபர் எவ்வித குற்ற செயல்களிலும் அதற்கு முன்னர் ஈடுபட்டிருக்கவில்லை என்ற அடிப்படையில் அவருக்கு பரோலில் செல்ல அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அந்தச் சந்தேக நபரான ரெய்மண்ட் என்பவர் ஐந்து மாதங்கள் மட்டுமே சிறையில் தண்டனை அனுபவித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.



# மொன்றியலில் எட்டு ஆண்டுகளுக்கு முன்னர் காணாமல் போன பூனை ஒட்டோவாவில் மீட்பு

கனடாவின் மொன்றியலில் எட்டு ஆண்டுகளுக்கு முன்னர் காணாமல் போன பூனை ஒன்று அதன் எஜமானரிடம் மீண்டும் சேர்க்கப்பட்டுள்ளது.

காணாமல் போன பூனை ஒட்டோவாவில் கண்டுபிடிக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. தன்னார்வ தொண்டு நிறுவனமான ஹூமன் சொசைட்டி என்ற நிறுவனம், இந்தப் பூனையை அதன் எஜமானருடன் சேர்த்துள்ளது.

அந்தப் பூனையின் உடலில் பொருத்தப்பட்டிருந்த மைக்ரோ சிப் மூலம் உரிமையாளர்கள் கண்டுபிடிக்கப்பட்டார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

மைக்ரோ சிப் பரிசோதித்த போது அதன் உரிமையாளர்கள் பற்றிய விவரங்களைக் கண்டறிய முடிந்த தாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த மைக்ரோ சிப்க்கள் மூலம் செல்ல பிராணிகளின் அடையாளத்தை உறுதி செய்யக்கூடிய நிலைமை காணப்படுகின்றது.

இந்த தொழில்நுட்பம் காணாமல் போகும் செல்லப் பிராணிகளை அவர்களின் உரிமையாளர்களிடம் கொண்டு சேர்க்க உதவுகின்றது என அந்தத் தன்னார்வ தொண்டு நிறுவனம் தெரிவித்துள்ளது.

# ரொறன்ரோ டவுண்டவுன் பகுதியில் மூன்று தடவைகள் ஒருவரைப் பாலியல் ரீதியாகத் துன்புறுத்திய நபர் கைது

கனடாவில் ஒரே நபரை மூன்று தடவைகள் பாலியல் ரீதியாக துன்புறுத்திய சந்தேக நபரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

ரொறன்ரோ டவுன்டவுன் பகுதியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. ஒரே நபரை, மூன்று வெவ்வேறு சந்தர்ப்பங்களில் இந்தச் சந்தேக நபர் பாலியல் ரீதியாகத் துன்புறுத்தியுள்ளார் எனக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

கடந்த முதலாம் திகதி தொடக்கம் 21 ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் மூன்று வெவ்வேறு சந்தர்ப்பங்களில் குறித்த சந்தேக நபர், பாதிக்கப்பட்டவரை பாலியல் ரீதியாக துன்புறுத்தி உள்ளார்.



பாதிக்கப்பட்டவரும் சந்தேக நபரும் ஒருவரை ஒருவர் அறியாதவர்கள் என தெரிவிக்கப்படுகிறது.

இந்த சம்பவத்துடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் சந்தீப் என்ற நபரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இந்த சந்தேக நபர் தொடர்பில் மேலும் தகவல்கள் இருந்தால் வழங்குமாறு பொலிஸார் பொதுமக்களிடம் கோரியுள்ளனர்.

21 வயதான சந்தேக நபர் ரொறன்ரோவைச் சேர்ந்தவர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த சந்தேக நபர் வேறும் குற்றச் செயல்களில் ஈடுபட்டிருக்கலாம் எனப் பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.